செ.வெ.எண்: 54/2021 நாள்: 30.07.2021

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கினங்க, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டத்தில் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் 1,152 பயனாளிகளுக்கு ரூ.2.02 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டத்தில் **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் 1,152 பயனாளிகளுக்கு ரூ.20,257,424/- மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.வினீத் இஆப, அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் இன்று (30.07.2021) வழங்கினார்கள்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது:***

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று தமிழக மக்களின் வாழ்வு வளம்பெற பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அதனை பரிசீலித்து அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர் "** என்ற திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், திருப்பூர் மாவட்டத்தில" **உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ்"** பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு காங்கேயம், தாராபுரம், மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகிறது. தமிழக அரசு ஆட்சிபொறுப்பை எற்ற 100 நாட்களுக்குக்குள் மிகச்சிறப்பாக செயல்பட்டு மக்களின் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்கிறோம் என்றார். அதுபோல தமிழக அரசு பொறுப்பேற்றத்திலிருந்து திறமையாக செயல்பட்டு பல ஆண்டுகளாக ஏழை, எளிய மக்களுக்கு தீர்வு காண முடியாத பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. அந்தவகையில் எழை எளிய மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டா, மாற்றுத்திறனாளிகள், முதியோர், விதவை, உடல் ஊனமுற்றோர்,

கணவனால் கைவிடப்பட்டவர் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு உதவித்தொகைகள் வழங்குதல் என பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 50,000 தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்வை இன்று (30.07.2021) சென்னை ராயப்பேட்டையில் துவக்கி வைத்துள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திட்டங்களில் ஒன்றான உங்கள் தொகுதியில் தளபதி என்ற திட்டத்தை ஆட்சிபொறுப்பேற்ற பின் **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** என்ற திட்டமாக செயல்படுத்தி மக்களின் பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு காண வழி செய்துள்ளார். தமிழக அரசு ஆட்சி பொறுப்பை எற்ற போது கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவல் உச்ச கட்டத்தில் இருந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்பான நடவடிக்கைகள் மூலம் அரசு நிர்வாகத்தை செயல்படுத்தி நோய் தொற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வந்த முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றினார். கொரோனா காலக்கட்டத்தில் மக்களின் நலனை கருத்தில் கொண்டு கொரோனா கால சிறப்பு நிவாரண நிதியாக ரூ.4000/- ரொக்கம் வழங்கியும், 14 வகையான தரமான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பையும் வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து உள்ளார். மேலும், தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்றை கட்டுப்படுத்த தமிழக அரசு பொதுமக்களுக்கு முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், தடுப்பூசி செலுத்திக் கொள்ளுதல் என பின்பற்ற வேண்டிய நடமுறைகளை செயல்படுத்த பல்வேறு வகையில் விழிப்புணர்வை எற்படுத்தி வருகிறது. எனவே, தமிழக மக்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்திலிருந்து நம்மையும், நம்மை சார்தோரையும் பாதுகாக்க அரசிற்கு ஒத்துழைப்பை தர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களின் அடிப்படையில், காங்கேயம் வட்டத்தில், வருவாய்த்துறையின் மூலம் 231 பயனாளிகளுக்கு ரூ. 27,72,000/- மதிப்பீட்டில் முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளும், 244 பயனாளிகளுக்கு ரூ.73,20,000/- மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், தொழிலாளர் நலத்துறையின் மூலம் கட்டுமானம் மற்றும்

அமைப்புசார தொழிலாளர்களுக்கு விபத்து மரணம் நிவரண உதவித்தொகை 1 நபருக்கு ரூ.1,05,000/-மும், இயற்கை மரணம் உதவித்தொகை 1 நபருக்கு ரூ.25,000/- மும், 8 பயனாளிகளுக்கு தலா ரூ.1000 வீதம் ஓய்வூதியமாக ரூ.8,000/- மும், கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கீழ் 48 பயனாளிகளுக்கு புதிய மின்னுணு குடும்ப அட்டைகளும் என மொத்தம் 535 பயனாளிகளுக்கு ரூ.,1,23,00,000/- மதிப்பீடிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இதனைத்தொடர்ந்து, தாராபுரம் வட்டத்திற்குட்ப்பட்ட வருவாய்த்துறையின் மூலம் 425 பயனாளிகளுக்கு ரூ.51,00,000/- மதிப்பீட்டில் முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளும், 152 பயனாளிகளுக்கு ரூ.25,91,424/- மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், தொழிலாளர் நலத்துறையின் மூலம் கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு விபத்து மரணம் நிவரண உதவித்தொகை 2 நபர்களுக்கு ரூ.2,10,000/-மும், இயற்கை மரணம் உதவித்தொகை 2 நபர்களுக்கு ரூ.50,000/- மும், 6 பயனாளிகளுக்கு தலா ரூ.1000 வீதம் ஓய்வூதியமாக ரூ.6,000/- மும், கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கீழ் 32 பயனாளிகளுக்கு புதிய மின்னுணு குடும்ப அட்டைகளும் என மொத்தம் 587 பயனாளிகளுக்கு ரூ.79,57,424/- மதிப்பீடிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இவ்விழாவில், தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இஆப, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.முருகன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.மனோகரன், மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**